செ.வெ.எண்.21 நாள். 12.9.2011

**நாமக்கல் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட தொழில் மையம் மூலம் 5 தொழிற்சாலைகளுக்கு முதலீட்டு மானியமாக ரூ.7.36 லட்சத்திற்கான காசோலைகள், 15 தொழிற்சாலைகளுக்கு மின்மானியமாக ரூ.10.00 லட்சத்திற்கான காசோலைகள் என மொத்தம் ரூ.20.36 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

----

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் குடும்ப அட்டை வேண்டுதல், வீட்டுமனைப்பட்டா, முதியோர் உதவித்தொகை, கல்விக்கடன், பட்டாமாறுதல், விதவை உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய 519 மனுக்கள் வரப்பெற்றது. மனுக்களை பரிசீலித்த மாவட்ட ஆட்சித்தலைவர் மனுக்களை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் அளித்து மனுக்களின் மீது 15 நாட்களுக்குள் உரிய நடவடிக்கை எடுக்குமாறும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து பொதுமக்களுக்கு தெரிவிக்கவும் அறிவுறுத்தினார்.



12.09.2011 நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப. அவர்கள் மாவட்ட தொழில் மையம் சார்பில் முதலீட்டு மான்யத் தொகை வழங்கினார்.

தமிழ்நாடு அரசு புதிய தொழிற்சாலைகள் தொடங்கினால் தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள இயந்திரங்களின் மொத்த மதிப்பில் 15 சதவீதத் தொகையை மூலதன மானியமாகவும், மேலும் புதிய தொழிற்சாலைகளில் 3 ஆண்டுகளுக்கு

உபயோகப்படுத்தப்படும் மின்கட்டணத்தில் 20 சதவீதத் தொகையினை மின்மானியமாகவும் மாவட்ட தொழில் மையம் மூலம் வழங்கி வருகிறது. இத்திட்டங்களின் கீழ் இன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் 5 தொழிற்சாலைகளுக்கு முதலீட்டு மானியமாக ரூ. 7.36 லட்சத்திற்கான காசோலைகள் மற்றும் 15 தொழிற்சாலைகளுக்கு மின்மானியமாக ரூ.10.00 லட்சத்திற்கான காசோலைகள் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து உயர்கல்வி உதவித்தொகை திட்டத்தின்கீழ் 12 மாணவ, மாணவியர்களுக்கு தலா ரூ.25 ஆயிரம் வீதம் ரூ.3 லட்சத்திற்கான காசோலைகள் என மொத்தம் ரூ.20.36 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 15 நபர்களுக்கு விவசாய கூலி தொழிலாளர் ஓய்வூதிய உதவித்தொகைக்கான ஆணைகளையும் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திரு எஸ்.எம்.இராசுமணி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திரு.இரா.சண்முகராஜா உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல்.